<u>மாணவருக்கு: காந்திஜீ</u> உண்மையான கவிகள்யாவும் உள்ளத்து உணர்
ச்சிகளை வெளியிடவந்த கருவிகள்தான். மனிதனுடை
ய அகவுணர்ச்சியை விளங்கச் செய்கிற அளவைப் பொறுத்தே கவிகளின்
முறைதோற்றங்களுக்கு மதிப்பு ஏற்படுகிறது ** எல்லாவற்றையும் நான்
அறிந்து விடவில்லை. இந்த உணர்ச்சி யொன்றே எனக்கு ஆக்கம் தருவதாக
இருக்கிறது ** அடிமையாக இருந்து வாழ்வதை காட்டிலும் பிச்சைவாங்கி உண்பது
எவ்வளவோ மேலான காரியம் ** பேசுகிறவர்களுடைய நடை, உடை, பாவனை
களையும் வளர்ச்சியையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுவதே பாஷை
யாகும் ** மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புலன்களை நல்லமுறையால்
தொழில்படச்செய்வதே அறிவுக்கு உண்மையான அபிவிருத்தி ** மனிதன்
என்றால் வெறும் அறிவுமாத்திரமல்ல, அல்லது ஸ்தூல உடலுமல்ல, உணர்
ச்சி மட்டுமோ; அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும்
• அழகிய முறையால் ஒன்று கூடினால்தான் மனிதன் ஆகிறான் ** நியாயமான
எந்தக் காரியத்தையும் சாதிப்பதற்கு தெளிவாக, நமது நெஞ்சத்தின் அந்தரங்கமே
வேண்டி நிற்கவேண்டும் ** கடவுள் கோணல் இல்லாத சொல்லக் கூடியவன்
நியாயமான வேலைக்காரனல்ல ** எண்ணங்களை உயர்ந்தால் பலம் அதிகரிக்கிற
தென்று கோழைகள் மயக்கம் அடைகின்றனர். ஆனால் தீர நெஞ்சம் படைத்தவர்
களோ, போராடுவது ஒன்றிலேயே நம்பிக்கை வைத்து அதிலே நிலைக்கிறார்
* கள் ** விரும்பியபோது சாகமுடியாததினால்தான் அவர்கள் உயிரோடிருக்கிறார்
களேயன்றி வேறில்லை ** ஒரு நோக்கமும் இல்லாமல் வெறுமனே சங்கீதத்தைப்
பழக்கிறதைவிட நல்ல விவேகத்தோடு கைத் தொழில் பயிற்சி பெறுவது, அறிவை
* எவ்வளவோ வளப்படுத்தும். ** எந்தப் பெரிய காரியத்தைவேண்டுமானாலும்
எடுத்துக் கொள்ளுங்கள். அதைச்சாதிப்பதற்கு எத்தனைபேர் முன்வருகிறார்கள் என்பது
முக்கியமல்ல; எத்தகைய உள்ளப்பண்பு வாய்ந்தவர்கள் முன்வருகிறார்கள் என்ப
தே அதன் வெற்றியை நிர்ணயிக்கும் அம்சமாகும். உலகத்திலே மகத்தான
காரியங்களைச் சாதித்த பெரியார் அனைவரும் எப்போதும் தனித்து நின்றே போரா
டியிருக்கிறார்கள் ** தனிப்பட்ட வாழ்க்கைக்கும் அதைப்போல வாழ்க்கைக்கும் ஆன்ம
* உணர்ச்சியே அடிப்படையாக அமைதல் வேண்டும் ** வாத்தின் தலையிலே
தண்ணீர் ஊற்றுவதினால் ஏதாவது பயனுண்டா? ** உண்மையாலேயே மனு
பாவம் அந்தப்போன அறிவான் மந்திரத்தைத்தான், அது புலப்படுத்துகிறது **
தான் செய்யவேண்டிய தர்மத்தைச் செய்யாமல் உணவு கொள்பவன் தன் உண
வைத் திருடுபவனாகிறான் ** அதர்மம் தர்மத்துக்குத் தலைவணங்குகிறது. எங்கு
மே அதர்மம் மலிந்திருந்தபோதிலும், தர்மமானது தனது உன்னத நிலையிலிரு
ந்து பிறழக்கூடாது என்றே அந்த அதர்மம் எதிர்பார்க்கிறது ** நாம் பாசத்த
மாக வாழவேண்டும் என்பதற்காகவே மரணபயத்தைத் துறந்துவிடுவோம் **
உயிர் துறப்பதற்கு முற்றிலும் தயாராயிருக்கும்போது, வாளையோ, கேடயத்தை
யோ செய்ய வேண்டுமென்று ஒருவன் விரும்பமாட்டான். உயிர் துறப்பதற்கு எவ்
வளவுக்கு எவ்வளவு ஒருவன் அஞ்சுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு உயி
ரை வாங்குவதில் அவனுக்கு ஆத்திரம் குறைவுதான் என்பது வெளிப்படையான
* உண்மை ** வெட்கங்களும் ~~[illegible]~~ ஜாதிகளுமே ஒருவனை மனிதனை செய்கின்
றன ** தியாகம் செய்வதினால் துன்பம் பாதிக்காவிட்டால், அந்தத் தியாகம்
தியாகமன்று. தியாகமும் வருத்தமும் ஒன்றுக்கொன்று பொருத்தமானவை
அல்ல. தியாகம் என்பதற்கு பொருள் "புனிதமாக்குவது" என்பதாகும்.
தான் செய்யும் தியாகத்திற்காகத் தன்னிடம் பிறரெல்லாம் அனுதாபம்
காட்ட வேண்டுமென்று எதிர்பார்ப்பவன் மனிதவர்க்கத்திலே ஒரு அற்பமான
* பாசாங்குகாரனாவான் ** உப்பு தனது உவர்ப்புத்தன்மையை இழந்துவிடுமானால்
* எதைக் கொண்டு அதற்கு உவர்ப்பூட்டுவது? ** மனிதத்தன்மை என்பது செ
ய்யும் பயமொத்தவாலும், அடிப்படைத் தைரியத்திலும், அடாபிடித்தன்மையாலும் இல்லை.
நியாயமான காரியத்தை அஞ்சாமல் செய்து, அதனால் வரும் பலனை ஏற்கச்
சித்தமாயிருப்பதே மனிதத்தன்மை. மனிதத்தன்மை, செயலால் ~~[illegible]~~ விளங்க
றது, சொல்லால் இல்லை ** ஒரு மாணவன் அரசியல் வாதியைப்போல் செயலில்
ஈடுபட்டுக் கொண்டு, அதே சமயத்தில் கல்வியையும் பயின்று வரமுடியாது **
* தவறான எண்ணங்களை அடிப்படையாகக் கொண்டு, ஆத்திரத்தோடு செய்யும் எந்த
க் காரியமும் அவர்களது சொந்த நோக்கத்தையும் கெடுத்துவிடும் **